**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 37/2019**
**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | பாபு |
| Father's/Husband's Name | : | நல்லதம்பி |
| Village | : | ஐயம்பாளையம் |
| Taluk/District | : | திருவண்ணாமலை |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.06.2025.
A3 died. Other accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை தாலுக்கா ஐயம்பாளையத்தில் குடியிருந்துவிவசாய வேலை செய்து வருகிறேன் . இதற்கு முன் நான் ஐயம்பாளையத்தில் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் . ஆஜர்எதிரிகள் அனைவரையும் தெரியும் . அவர்கள் எங்கள் பக்கத்து கிராத்தை சேர்ந்தவர்கள் . இவ்வழக்கில் இறந்துபோன சர்கார்கானை எனக்கு தெரியாது . அ.சா.1 ஜப்ரு கானைஎனக்கு தெரியாது . சுமார் 10 வருடத்திற்கு முன் நான் ஐயம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தபோது திருவண்ணாமலை கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிவசங்கர் என்பவர் எனக்கு போன் செய்தார் . அவர் ஐயம்பாளையம் புதூரில் யாரோ டையர் எரித்துக்கொண்டிருக்கிறார்கள் , அங்கு வாருங்கள் என்று அழைத்தார்கள். நான் உடனே ஐயம்பாளையம் புதூர் பிள்ளையார் கோவில் அருகே சென்று பார்த்தேன். உதவி ஆய்வாளர் சிவசங்க ர் மற்றும் போலிசார் அங்கு இருந்தார்கள். அப்போது பெரிய டையர் எரிந்துகொண்டிருந்தது . நாங்கள் அதை தண்ணீர்கொண்டு வந்து அனைத்தோம் . அருகாமையில் வேறு எந்த நபர்களும் இல்லை. பின்னர் அங்கிருந்து வந்துவிட்டேன். லயோலா பள்ளி அருகே

போலிசார் நின்று இதை யார் செய்தார்கள் என்று என்னிடம் விசாரித்தார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் . மறுநான் காலையில் நான் டீ கடைக்கு சென்றபோது அத்தியந்தல் ஏரிக்கரை நடுவே எரிந்த நிலையில் ஒரு லாரி எரிந்த நிலையில் இருந்தது . போலிசாரும் பொதுமக்களும் அங்கு இருந்தார்கள். நான் நடந்ததை கேட்டேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிஸ் விசாரணையில் கடந்த 02.05.2013 ம் தேதி நானும் எங்கள் ஊர் உப தலைவர் திருமலை என்பவரும் எனது சொந்த வேலை காரணமாக திருவண்ணாமலைக்கு இருசக்கர வாகனத்தில் சென்று வந்தோம் என்றும் , அதிகாலை 1 மணியளவில் எங்கள் ஊர் பக்கம் உள்ள அத்தியந்தல் ஏரிக்கரையில் ஒரு கண்டெய்னர் லாரி தீப்பட்டு எரிந்ததை பார்த்தோம் என்றும் , நானும் திருமலையும் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அருகே சென்றபோது பின்னர் பெயர்கேட்டு தெரிந்து ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த ஜப்ருகான் என்பவர் கூச்சல்போட்டு சைகை காட்டி இந்தியில் தன்னை காப்பாற்றுமாறு சொன்னார் என்றும், அப்போது லாரி எறிந்துகொண்டிருந்த வெளிச்சத்தில் எங்கள் ஊருக்கு அருகே உள்ள ஊரான பெரிய கோட்டாங்கள் கிராமத்தை சேர்ந்த வேலு மகன் முருகன் , அயோத்தி மகன் பார்த்திபன் , வேலுமகன் ஏழுமலை , காமராஜ் த.பெ. கோவிந்தசாமி, பட்டுசாமி த.பெ. முருகேசன் ஆகியோர் எங்களை பாத்து வீட்டு பக்கம் ஓடிச்சென்றார்கள் என்றும், பின்னர் நானும் திருமலையும் , ஜாப்ருகானும் சேர்ந்து எரிந்துகொண்டிருந்த லாரி பதிவு எண் . HR55N6976-ன் ஓட்டுநர் சர்கார்கான் என்பவரை தீவிபத்தில் இருந்து காப்பற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும் , அங்கிருந்து அவர் மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், எங்கள் ஊர் அருகில் உள்ள ஊரான அத்தியந்தல், பெரியகோட்டாங்கல், ஒட்டகுடிசல், ஐயம்பாளையம் , சின்னப்பாளையப்பட்டு ஆகிய ஊர்களை சேர்ந்தவர்களை எனக்கு நன்கு தெரியும் என்றும் , மேற்படி விபத்தில் நானும் என் ஊர் உபத்தலைவரும் சென்று பார்த்தோம் என்றும், பெரியகோட்டாங்கல் கிராத்தை சேர்ந்த மேற்படி ஆஜர் எதிரிகள் முருகன் , பார்த்திபன், ஏழுமலை, காமராஜ், பட்டுசாமி அவர்கள் தப்பிச்சென்றதை லாரியை எரித்து தீ வைத்ததை பார்த்தோம்

என்றும், மற்றவர்கள்இருட்டில் மறைந்திருந்ததால் அவர்களை சரியாக பார்க்கவில்லை என்றும் , மேற்படி லாரியின் கிளீனர் ஜப்ருகான் கொடுத்த புகாரின் பேரில் திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்று கூறிவிட்டு , தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.